பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 17 ஞாயிற்றுக்கிழமை (03 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 309

யுத்தம் மூலம் தீர்வு தேடினால் நாடு இருகூறுகளாகப் பிரியும்

ஏழு வருடங்களில் சாத்தியம் என்கிறார் முன்னாள் தளபதி

கொழும்பு, ஒக்டோபர் 3

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முனைந்திருப்பது பேராபத்தில் முடியும்.

அந்த அரசியல் பிரச்சினைக்கு யுத்தம் நடத்துவதன் மூலம் தீர்வு தேடினால் 2000 ஆவது ஆண்டுக்கு முன்னர் — இன்னும் ஏழு வருடங்களில் நாடு இரு கூறுகளாகப் பிரிந்து விடும். அதனைத் தடுக்க முடியாது.

இவ்வாறு எச்சரித்துத் தெரிவித்திருக்கிறார் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக்க.

பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:-

இலங்கையின் இனப்பிரச்சினை நீண்ட கால விவகாரம். இனப்பிரச்சினை உண்டு என்பதை அரசியல்வாதிகள் முன்னர் ஏற்றுக் கொண்டுள்ளனர். திடீரென இருந்தாற்போல அந்தப் பிரச்சினை இல்லை என்று ஜனாதிபதி கூறுவது பொருத்தமற்றது; அது எடுபடாது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை விரைந்து காண வேண்டும். அதை

(8 ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழகத்துக்கு கூடுதலான மாணவர்கள்

வெட்டுப்புள்ளி நிலை குறைக்கப்படும்

கொழும்பு, ஒக். 3

1993 - 1994 ஆம் கல்வி ஆண்டிற்கு பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு ஏற்கனவே நிர்ணயித்த எண்ணிக்கையிலும் கூடுதலாக இருக்கும்.

பல்கலைக் கழக அனுமதிக்குத் தேவையான மொத்தப் புள்ளிகளின் வெட்டுப் புள்ளி நிலை குறைக்கப்பட உள்ளது.

உயர்கல்வி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா நேற்று முன்தினம் நடத்திய மாநாட்டில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக உபவேந்தர்கள் பீடத்தின் தலைவர்கள், பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை — கடந்த வருடம் ஆகஸ்ட்மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும் ஒரு தொகுதி மாணவர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்க உள்ளது.

ஒவ்வொரு பீடத்துக்கும் சுமார் 9 ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆகஸ்ட் மாதப் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் அனுமதி கோரி அடுத்த மாதம் 22 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்.

இந்த மாதம் 18 ஆம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை விண்ணப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த ஆண்டு ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களும் 1993 94 ஆம் கல்வி ஆண்டுக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம் என்று ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த)

கிளாலிப் பகுதியை நோக்கி விமானங்கள் எரிகுண்டு வீச்சு

தென்மராட்சி, ஒக்.

நேற்று மாலை 5.30 மணிக்கு கச்சாய் தொடக்கம் சிறாவி வரையான பகுதியை நோக்கி மொம்மரசுகள் எரிகுண்டு வீச்சு நடத்தின. இதனால் இப்பகுதியில் ஒரே புகை மண்டலமாகக் காணப்பட்டது.

இதேவேளை செற்பவிப்பண்டிதர் குடியிருப்பு பகுதியை நோக்கி ஷெல் வீச்சும் ஹெலிகளிலிருந்து றொக்கெட் தாக்குதலும் நடத்தப்பட்டன.

இதனால் இப்பகுதியிலுள்ள பாடசாலை ஒன்று சேதம் அடைந்தது.

(இ-117)

கொடிகாமம் சந்தியில் ஹெலி தாக்குதல்!

எட்டு பொதுமக்கள் காயம்

கொடிகாமம் சந்தியில் நேற்று ஹெலி நடத்திய தாக்குதலில் எட்டுப் பேர் காயம் அடைந்தனர்.

பகல் 11-45 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

எம். தேவதாஸ் (வயது 19), த. மாரிலம்மா (வயது 46), எஸ். சிவராசா (வயது 39), சி. தேவி (வயது 46), எஸ். எஸ்விப்பிள்ளை (வயது 40), செ. தூர் (வயது 8), என். சோதிமலர் (வயது 35), கே. தங்கமலர் (வயது 57) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

காயம் அடைந்தவர்கள் யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-117)

பருத்தித்துறையில் குண்டு வீச்சு!

இரு மீனவர்கள் காயம்

வடமராட்சி, ஒக் 3

நேற்று பருத்தித்துறை பகுதியில் இரு யோமா செட்டி விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின.

இச்சம்பவத்தில் இரு மீனவர்கள் காயமடைந்தனர்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் பருத்தித்துறை கரை யோரமாக பறந்த இரு பொம்மர்களில் ஒன்றே குண்டு வீச்சில் ஈடுபட்டது.

குண்டுகள் பருத்தித்துறை முனைப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன

சம்பவத்தில் அறுக்காஞ்சி அந்தோனிப்பிள்ளை (வயது 36) அவரது மகன் அந்தோனிப்பிள்ளை ரூபன் (வயது 10) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

(இ-173-109-9)

மிருசுவிலில் ஷெல் தாக்கு பெண் உடல்சிதறி மரணம்

தென்மராட்சி, ஒக்.3

நேற்றுப் பகல் 12.30 மணி அளவில் புளோப்பனையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி பாடசாலையில் வீழ்ந்து வெடித்தது.

அங்கமய இராணுவ நடவடிக்கை காரணமாக தெற்பவி பண்டிதர் குடியிருப்பில் இருந்து இடம் பெயர்ந்து இப் பாடசாலையில் தங்கியிருந்த இரு தாய் ஒருவர் உடல் சிதறி அதே இடத்தில் பலியானார்.

வேலணை செட்டிபுலத்தைச் சேர்ந்த தவராசா பூபதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் ராணுவம் பதுங்கியிருந்து தாக்குதல்

3 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பில் மின்வெட்டி கங்கை என்னுமிடத்தில் கடந்த புதனன்று இராணுவத்தினர் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான லெப்டினன்ட் புலேசவிங்கம் (கண பதிப்பிள்ளை வன்னியசிங்கம் - மன்னம்பிட்டி), இரண்டாம் லெப்டினன்ட் பேதுரு (தாமோதரம்பிள்ளை நல்லதம்பி — 11 ஆம் கட்டை ஆலையடி வீதி, வந்தாறுமூலை, வீரவேங்கை) மனோ

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் இந்திய திருச்சபை
யாழ். அத்தியட்சாதீனம்

சிறு கைத்தொழில் நிலையம்

சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி சங்க நிலையம்	இணுவில் மக்லியட் ஆஸ்பத்திரி முன் நிலையம்
1. தையல்	1. தையல்
2. வீட்டுப்பணி	2. வீட்டுப்பணி
3. கைப்பணி	3. கைப்பணி
4. பன்னவேலை	4. பன்னவேலை
5. தும்பு வேலை	5. தும்பு வேலை
6. கிளை அலங்காரம்	6. கிளை அலங்காரம்
7. கேக் ஐசிங்	7. கேக் ஐசிங்

மேற் குறிப்பிட்ட சிறுகைத்தொழில் நிலையம் 1993 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். 16 வயதிற்கு மேற்பட்ட யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி 08 - 10 - 93 விண்ணப்பப்படிவங்களை கீழே தரப்பட்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

1 மாதர் கிராமிய அபிவிருத்திச்சங்கம் சித்தன்கேணி	1. காரியதரிசி மக்லியட் ஆஸ்பத்திரி இணுவில்
2. குரு இல்லம் தென் இந்திய திருச்சபை மானிப்பாய்	2. குரு இல்லம் தென் இந்திய திருச்சபை இணுவில்

(இ-1996)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
02 — 11 — 1933

மறைவு:
03 — 10 — 1991

அமரர்
கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்
(நாட்டுப்பற்றார்)

(உரிமையாளர் - தங்கம் அரிசி ஆலை, வண்ணார்பண்ணை, சுந்தரம் ஸ்ரோர்ஸ், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், பேரனாசாலை, கொழும்பு)

திதி: 10—10—1993

ஈடு செய்ய முடியாத இழப்புக்கு — என்றும் நினைவு கூரப்பட்டுக் கொண்டேயிருக்கும். உங்கள் சேவைகள் மறக்கப்பட முடியாதவை

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
அன்புக்குரிய மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

83/16, அரசடி வீதி,
தஞ்சி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(27529)

தற்போதைய ராணுவ நடவடிக்கை முடிவடைந்த பின்பே இனி கப்பல்

கொழும்பு, ஒக். 3

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் முடியும் வரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பருத்தித்துறை துறைமுகத்துக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதை இடை நிறுத்தி வைக்க யாழ் காப்புப் படையின் உயர்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக வெளித்தகவல் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

உணவு மற்றும் பொருள்களுடன் வடக்கே சென்ற சோமாலி கப்பல் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள காங்கேசன்துறை துறைமுகத்துக் சென்று தரித்துள்ளதாகவும்—

ஆட்டாநாட்டின் பல பகுதிகளிலும் விமான, மற்றும் பீரங்கித் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதால் பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்க முடியாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-5-6)

வெண்கட்டி கரும்பலகை சுமவிநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 3

வெண்கட்டி, கரும்பலகை சுமை ஆகியவற்றிற்கு விண்ணப்பித்து இதுவரை பெற்றுக் கொள்ளாத சகல பாடசாலை அதிபர்களும் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவற்றிற்குரிய பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்—

அன்றைய தினம் பெற்றுக் கொள்ளத்தவறுவோருக்கு பின்பு வழங்கப்படமாட்டாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

இன்று

யாழ்ப்பாணம், ஒக்.3

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்டச் சங்கத்தின் விஷேட கூட்டம் ஒன்று இன்று காலை 9 30 மணிக்கு சிந்தாமணி மனோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. (உ-20)

நிவாரணம் கொலரா பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 3

தற்போது தென்மராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் "ஒப்பரேஷன் யாழ் தேவி" இராணுவ நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்த மக்களின் நிவாரணம் சம்பந்தமாகவும் —

கொலரா நோய்த் தடுப்பு சம்பந்தமாகவும் —

கலந்துரையாடல் ஒன்று யாழ். அரச அதிபரின் தலைமையில் செயலக மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இதில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்களின் தலைவர்களையும், பிரதேச செயலர்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வ. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார். (இ-162)

அரசியல் தீர்வுமுயற்சியில் அரசு விலகிவிடவில்லை

ஐ.நா வில் அமைச்சர் ஹமீத் உரை

கொழும்பு, ஒக். 3

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் நோக்கத்திலிருந்து அரசு என்றும் விலகவில்லை.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஏ. சி. எம். ஹமீது நேற்று ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தெரிவுக்குழு அரசியல் தீர்வு ஒன்றைக் காண முயற்சிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (உ-6)

1991 - 92 பல்கலை. அனுமதி மீள்பரிசீலனை செய்க!

சித்த மருத்துவ மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ் பல்கலைக் கழகத்திற்கு 1991 - 93 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் அனுமதி — குறிப்பாக மருத்துவபீட அனுமதி கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாக இருப்பதால்— மேற்படி அனுமதியை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறான கோரிக்கை அடங்கிய அவசர கடிதம் ஒன்றை யாழ். சித்த மருத்துவ மாணவர் மன்றம் உயர் கல்வி அமைச்சர், ஜனாதிபதி மற்றும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.

பின்வரும் காரணங்களைக் கருத்தில் கொண்டு பல்கலைக் கழக அனுமதியை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

★ ஏனைய மாணவர்களுடன் ஒப்பிடும்போது வடபகுதி மாணவர்கள் பலவசதிகளின்றி கல்வியை மேற்கொண்டனர். மின்சார வசதின்மை மற்றும் மண்ணெய் விலை அதிகரிப்பு என்பன இவற்றில் குறிப்பிடக் கூடியவை.

★ மாணவர்கள் பலர் இடம்பெயர்ந்தமையும் அவர்களுடைய பெற்றோர் உடன் பிறப்புகளை தற்கால சூழ்நிலையில் இழக்க நேரிட்டமையும்.

★ ஆசிரியர்கள் இடம் பெயர்ந்தமை, குறைந்த கால இடைவெளியில் மீண்டும் மீண்டும் ஊரடங்கு சட்டம் பிறப்பித்தமை கல்வியை ஒழுங்காக தொடர முடியாது பாதித்தது.

★ மாணவர்களின் மனோநிலை பாதிக்கப்பட்டமை கிரகிப்புத் தன்மை போதிய ஆளாமின்மை என்பனவையும் முக்கிய காரணிகளாகும். அத்துடன் மாணவர்கள் பல தாக்கங்களுக்கு உட்பட்டு இருந்தமை. (த)

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி

தென்மராட்சி, ஒக். 3

இயக்கச்சி இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியிருக்கும் பேராலை, தர்மகேணி, கல்விப்பளை, புலோப்பளை ஊரிப் பகுதி மக்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலரத்தினால் நிவாரண உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கையினால் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த அனைத்து மக்களும் தற்தமது வலிப்பிடங்களிலிருந்தும் வெளியேறி இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-117)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

பொதுச் சபைக் கூட்டம்

காலம்:- 4 — 10 — 93 திங்கள் 3 00 மணி
இடம்:- புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம்
எழிலகம் முன்பாக யாழ்ப்பாணம்.

போர்க்கால சூழ்நிலை பற்றி யாழ். மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் சகல தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் அனைவரையும் சந்தித்து கலந்துரையாட உள்ளார். ஆகவே தயவு செய்து இம் முக்கிய சந்திப்பில் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி 5994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ... மாநகர ... யாழ்ப்பாணம்

ஒப்பரேஷன் யாழ்தேவி: மரபு வழி போராகியது

படையினரின் பேரிழப்பு அரசுக்கு திகைப்பு

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்பது கொழும்பில் சர்ச்சைக்குரிய விவகாரமே

— உதயகாந்தன் —

யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்கென ஸ்ரீலங்கா முப்படைகள் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் தொடங்கிய பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கை முதற்கட்டத் தோல்வி கண்டுவிட்டது. அது முடிவடைந்து விட்டதோ, தொடர்கிறதோ இன்னும் தெரியாமலே இருப்பினும் முதற் தோல்வி தோல்வியே!

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம், 8 ஆம் திகதி தனபதி கள் டென்னிஸ் கொரேக்கடுவ, விஜய விஜேரத்ன மற்றும் உயரதிகாரிகள் எடுப்பே கொலையுண்டதன் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முப்படைகள் கூட்டாக ஆரம்பித்த முதலாவது பெரும் இராணுவ நடவடிக்கை இதுவாகும்.

இதற்கும் மேலாக, ஜனாதிபதி விஜேதுங்கா பதவி யேற்ற பின்னர், முப்படைகளும் வடக்கு - கிழக்கில் தொடுத்த மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையும் இதுவே. வடக்கு - கிழக்குப் பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல. பயங்கரவாதப் பிரச்சனையே என்று 'பிரகடனப்படுத்தி' இராணுவத் தீர்வையே அரசு நாடி நிற்கிறது என்று அவர் வெளிப்படையாக வர்த்தமானப்படுத்திய பின்னர், நடத்த முதலாவது பெரிய இராணுவ நடவடிக்கையும் இதுவே.

அதுமாத்திரமன்றி, இராணுவக் கட்டமைப்பில் மாற்றம் செய்யப்பட்டு புதிதாக பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்பட்டு, முப்படைத் தளபதிகளுக்கே பூரண அதிகாரங்களையும் வழங்கி, போர்களத் தளபதிகளுக்கே வெற்றி தோல்வியின் பொறுப்பை ஒப்படைத்து ஊக்குவித்த பின்னர் படையினர் தொடுத்த முதலாவது பெரும் தாக்குதலும் இதுவே.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான அரவி — பொம் வைவெளித் தாக்குதல் கருவியே கிளைத்தது. அதுவே தாய்ப்போராக இருக்கும் என்று கற்பனை செய்து வகுத்த கொரேக்கடுவவும் தொலைந்தார். அதன் பின்னர் பல தாக்குதல் திட்டங்கள் வகுத்து, வகுத்து மெருகிட்டுக் கைவிடப்பட்ட பின்னர், நீண்டகாலத் தயாரிப்புடன் நடைமுறைப்படுத்தப் பட்ட பாரிய தாக்குதல் திட்டம் இது.

கற்றிவளைக்கும் மூலோபாயம்

யாழ்ப்பாணம் கடல் சூழ்ந்த பிரதேசம். அதனால் கடல்வழியே கற்றிச் சூழ்ந்து கொண்டால் குடாநாட்டை இலகுவில் நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் - இது ரஞ்சன் விஜேரத்னா காலத்திலேயே முன்னை போடப்பட்ட பிரதான இராணுவ மூலோபாயம். அந்த மூலோபாயத்தின் உப வழியாகப் பல திட்டங்களைத் தீட்டி நடைமுறைப் படுத்தியும் கூட, அரச படைகளால் குடாநாட்டைச் சூழ்ந்து பிடித்துக் கொள்ள முடியவில்லை.

ஆனையிறவுப் பாதையையும் கொம்படிப் பாதையும் மூடிவிட்ட நினைப்பில் "விடுதலைப் புலிகளை போத்தலுக்குள் அடைத்து விட்டோம்" என்று இராணுவ உயர் அதிகாரிகள் வீரப்பிரதாபம் பேசினார்கள். வலிகாமத்தில் வடக்கே நவிலிகூ 'காங்கேசனில் தொடங்கி, மாதகல், பொன்னாலை, காரைநகர் என்று தீவுப்பகுதியை அடைந்து, மண்டைதீவினூடாக பூநகரி வழி கொண்டு ஆனையிறவுக்குப் போனதுதான் குடாநாட்டை முடிவிட்டதாக அல்லது அதனைவடக்கின்பிரதான நிலப்பரப்பில் இருந்து தனித்துவிட்டதாக நினைத்துக் கொண்டே மேலே கூறியவாறு எக்காளம் போட்டார்கள்.

ஆனால் கொலிப் பாதையை விடுதலைப் புலிகளும் மக்களும் சேர்ந்து நிறைத்ததும் அப்போது எக்காளம் போட்ட படைத் தலைவர்கள் விழி பிதுங்க வேண்டியதாயிற்று. ஆனையால் கொலிக் கடற்பரப்பை தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவித்தார்கள் வடக்கு-கிழக்கில் தாக் சண்டம் போட்டுக் காரியமாற்ற முடியாது என்ற நிலையை மறந்தே அவ்வாறு செய்தார்கள். தமது சண்டம் செல்லுபடியாகவில்லை என்பதை கண்டு கொலிக் கடலில் பயணம் செய்த பொதுமக்களை சுட்டுக் கொன்றும் தடுக்கப் பார்த்தார்கள். மிரட்டிப் பார்த்தார்கள். தடுக்க இயலவில்லை. அதன் விளைவாக கிளாலிப் பிரதேசத்தைப் பிடித்துவிடத் திட்டம் தீட்டினார்கள்.

கிளாலியைக் கைப்பற்றினால் குடாநாட்டை மூடி விடலாம். அதன் பின்னர் தாம் நினைக்கும் அக்கிரமங்களைப் புரிந்து தமிழர்களை ஒழித்துவிட்டு, விஜேதுங்கா இனப்பிரச்சினை இல்லை என்று கதையை உண்மையாக்கி விடலாம் என நினைத்தார்கள். தமிழர்களை ஒழித்து தமிழர் பிரச்சினையை இல்லாமற் செய்து விடுவதே சிங்களப் பேரினவாதத்தின் உள்ளார்ந்த திட்டம் என்பதைத் தமிழர்கள் எக்காலமும் மறந்து விடலாகாது.

ஒப்பரேஷன் யாழ்தேவி

கிளாலியைக் கைப்பற்றுவதன் முலம், யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வேண்டும் என்ற தமது மூன்று வருட காலக் கனவை நனவாக்கலாம் என்று கணக்குப் போட்டார்கள் படைத்துறைத் தலைவர்கள். அதனாலேயே கிளாலிப் போருக்கு "ஒப்பரேஷன் யாழ்தேவி" என்று குழூப் பெயரிட்டார்கள்.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட துருப்புகளை இயக்கத்தில் குவித்தார்கள். கன்னார், மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து போர்க்கள அனுபவம் உள்ள சிப்பாய்களைக் கொண்டு வந்தார்கள். அருவிக் கல்முனையில் இருந்த முகாமை மூடி துருப்புகளை இயக்கத்துக்கு நகர்த்தினார்கள். களத்தில் போரிட்ட அனுபவம் உள்ளவர்களைத் திரட்டித் தாக்குதலை நடத்தினால் கொலிக்குப் போய் நாம்தான் முடிவிட்டதாக அல்லது அதனைவடக்கின்பிரதான நிலப்பரப்பில் இருந்து தனித்துவிட்டதாக நினைத்துக் கொண்டே மேலே கூறியவாறு எக்காளம் போட்டார்கள்.

ஆனால் கொலிப் பாதையை விடுதலைப் புலிகளும் மக்களும் சேர்ந்து நிறைத்ததும் அப்போது எக்காளம் போட்ட படைத் தலைவர்கள் விழி பிதுங்க வேண்டியதாயிற்று. ஆனையால் கொலிக் கடற்பரப்பை தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவித்தார்கள் வடக்கு-கிழக்கில் தாக் சண்டம் போட்டுக் காரியமாற்ற முடியாது என்ற நிலையை மறந்தே அவ்வாறு செய்தார்கள். தமது சண்டம் செல்லுபடியாகவில்லை என்பதை கண்டு கொலிக் கடலில் பயணம் செய்த பொதுமக்களை சுட்டுக் கொன்றும் தடுக்கப் பார்த்தார்கள். மிரட்டிப் பார்த்தார்கள். தடுக்க இயலவில்லை. அதன் விளைவாக கிளாலிப் பிரதேசத்தைப் பிடித்துவிடத் திட்டம் தீட்டினார்கள்.

கிளாலியைக் கைப்பற்றினால் குடாநாட்டை மூடி விடலாம். அதன் பின்னர் தாம் நினைக்கும் அக்கிரமங்களைப் புரிந்து தமிழர்களை ஒழித்துவிட்டு, விஜேதுங்கா இனப்பிரச்சினை இல்லை என்று கதையை உண்மையாக்கி விடலாம் என நினைத்தார்கள். தமிழர்களை ஒழித்து தமிழர் பிரச்சினையை இல்லாமற் செய்து விடுவதே சிங்களப் பேரினவாதத்தின் உள்ளார்ந்த திட்டம் என்பதைத் தமிழர்கள் எக்காலமும் மறந்து விடலாகாது.

ஒப்பரேஷன் யாழ்தேவி

கிளாலியைக் கைப்பற்றுவதன் முலம், யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வேண்டும் என்ற தமது மூன்று வருட காலக் கனவை நனவாக்கலாம் என்று கணக்குப் போட்டார்கள் படைத்துறைத் தலைவர்கள். அதனாலேயே கிளாலிப் போருக்கு "ஒப்பரேஷன் யாழ்தேவி" என்று குழூப் பெயரிட்டார்கள்.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட துருப்புகளை இயக்கத்தில் குவித்தார்கள். கன்னார், மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து போர்க்கள அனுபவம் உள்ள சிப்பாய்களைக் கொண்டு வந்தார்கள். அருவிக் கல்முனையில் இருந்த முகாமை மூடி துருப்புகளை இயக்கத்துக்கு நகர்த்தினார்கள். களத்தில் போரிட்ட அனுபவம் உள்ளவர்களைத் திரட்டித் தாக்குதலை நடத்தினால் கொலிக்குப் போய் சேர்ந்த கனரக ஆயுதங்களை துணையாக்கிக் கொண்டனர். போர்க்கள அனுபவமுள்ள துடிப்புள்ள பகுதித் தளபதிகளை இயக்கத்தை போர் முனைக்குக் கூப்பிட வந்தனர். களநிலைமையைப் பொறுத்து தாம் பொருத்தமெனக் கருதும் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கும் பொறுப்பை முன்னணியில் உள்ள கட்டளை விடும் அதிகாரிகளுக்கு வழங்கினர்.

அரசியல்

முப்படைத் தளபதிகளான சிங்க லவ்வ, மொஹான் சமரசேகர, ரெஜிமண் குணவர்த்தனா ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பில் தாக்குதல் ஆரம்பமாகியது. இராணுவம் முன்னேறுவதற்கு வசதியாக கடற்படையும், விமானப்படையும் தமது பலத்த சக்தியையும் வளங்களையும் பயன்படுத்தின.

இயக்கச்சிப் போர்க்களம்

புதன்கிழமை (29 - 09 - 93) காலை 7-30 மணிக்கு ஆரம்பமான அரச படைகளின் பெரும் எடுப்பிலான தாக்குதலை விடுதலைப் புலிகள் எதிர்கொள்ளத் தொடங்கியதும் அது பெரும் போராக வெடித்தது.

ஒரு பக்கத்தில் — அரச பக்கத்தில்—பெரும் படை அணி. ஏராளமான கனரக வாகனங்கள் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் — இராணுவப் படைக்கு உதவியாக கடற்படை, விமானப்படை கட்டுத் தாக்குதல் பகல் நேரம். வெறும் வெட்டவெளி. மறைந்து கொள்வதற்கு சிறியசிறிய பற்றைகள் தவிர வேறு எதுவும் இல்லை. (பெரிய பற்றைக் காடுகள் எல்லாம் விறகுக்காக வெட்டித் தீர்க்கப்பட்டு விட்டன)

அடுத்த பக்கத்தில் விடுதலைப் புலிகளின் படை அணி. எண்ணிக்கையோ குறைவு. "விரோல் ஆம்ஸ்" என்று அரச படைகளே வர்ணித்த கிறனைட் ஆயுதங்களைக் கொண்டு அவர்கள் களைக்காது, சளைக்காது போராடினார்கள்.

தமது பலத்தைப் பொறுத்தவரையில் வெறும் தாக்குதலாக நினைத்தே யாழ்தேவி நடவடிக்கையை அரச படையினர் தொடங்கினர். இலகுவில் கிளாலியைப் பிடித்து விடலாம் என்று எண்ணினர். ஆனால் விடுதலைப் புலிகள் விடவில்லை. திரத்துடன் எதிர்தாக்குதல் தொடுத்தார்கள். பலமான பதிலடி கொடுத்தார்கள். அதனால் இயக்கச்சித் தாக்குதல் "ஒப்பரேஷன் யாழ்தேவி" ஒரு மரபு வழிப் போராக மாறியது. மின்னு கிறது தான் ஆனால் அதன் காரம் பெரியது. அந்தக் காரத்தை அரச படைகளை உணரவைத்தனர் புலிகள்.

ஆனையிறவு மரபு வழிப் போரில் விடுதலைப் புலிகள் சர்வதேசம் வியக்கும் வண்ணம் எவ்வாறு முத்திரை குத்தினார்களோ அவ்வாறே இயக்கச்சிப் போரிலும், மரபு வழி இராணுவமாக மாறி, பெரும்படைக்குச் சரிநிகராக நின்று 131 இராணுவத்தினரை போர்க்களத்தில் சரித்து வீழ்த்தினர். அவர்களில் 9 பேர் அதிகாரிகள். காயமுற்ற மிகுதி 175 பேரிலும் இன்னும் பலர் உயிர் துறந்து போரில் மாண்டவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும்.

இந்த வருடத்தில் இராணுவத்துக்கு ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பு இது என்பதை இராணுவப் பேச்சாளர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். பெரும் படை அணியை வீரத்துடன் எதிர்த்தும் போரிட்டு ஒரு கிலோமீட்டர் நேரத்தில் இத்தனை பேரிழப்பையும் புலிகள் ஏற்படுத்தியிருக்கிறார்களே என்று இராணுவப் பகுப்பாய்வாளர்கள் வியக்கிறார்கள்.

அரச படைகளுக்கு இருந்ததுபோல விமானத் தாக்குதல், கடற்தாக்குதல் உதவி எதுவும் இல்லாமலே பட்டப் பகல் வேளையில் தனியாக தரைத் தாக்குதல் முலம் நூற்றுக்கணக்கான துருப்புகளை விடுதலைப் புலிகள் வீழ்த்தியிருக்கிறார்கள்.

தங்களது தோல்வியை ஒப்புக் கொள்ளாததுபோல, அரச இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நவீன் அபேசேன, "விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தைக் கைப்பற்றுவது தற்போதைய இராணுவ நடவடிக்கையின் நோக்கமல்ல. இயன்றளவு புலிகளை அழிப்பதே தற்போதைய நடவடிக்கையின் நோக்கம்" என்று கூறியிருக்கிறார்.

மாற்றிப் பேசும் தந்திரம்

முதற்தோல்வி பெரும் தோல்வி, பேரிழப்பாயிற்று என்றதும் வழமையான பாணியில் கதையை மாற்றுகிறார் அவர். விடுதலைப் புலிகள் தரப்பில் 80 வீரமரணங்கள் சம்பவித்துள்ளன. அவர்களது வீரத்தினாலும் திரத்தினாலும் தான் அரசாங்கப் படைகள் பேரிழப்பைச் சந்தித்தன. ஒரு கிலோமீட்டர் நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்களை அரசு இழந்தது.

இதனை மறைப்பதற்காக கொலிக்கைக் கைப்பற்றி யாழ்ப்பாணத்தைப் பிடிப்பது என்ற தமது திட்டத்தையே மாற்றிப் பேசுகிறார் அவர்கள். மறுபக்கமாகப் பேசத் தொடங்கி விட்டார்!

விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறி இயக்கச்சி போருக்கு முன்னரும், போரின் போதும் கொத்தும் 34 பொதுமக்களைக் கொன்றும், 65 பொதுமக்களை காயமுறவும் செய்ததை அரசாங்கமும் இராணுவமும் மறக்கப் பார்க்கலாம். ஆனால் உண்மை அதுவே. (அட்டவணையைப் பார்க்கவும்)

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்று ஒரு வருடத்திற்குப் பின்னர் இராணுவம் புறப்பட்டதற்குப் பல காரணங்களும் பின்னணியும் உள்ளன.

மண்கிண்டிமலைத் தாக்குதல், கொலி, பருத்தித்துறையில் நடந்த படகுத் தாக்குதல்கள் என்பனவற்றால் விடுதலைப் புலிகளை வெல்வது அல்லது பலவீனப்படுத்துவது கடினம் என்ற கருத்து தென்னிலங்கையில் நிலை கொள்ளத் தொடங்கியது.

இந்த எண்ணத்தை வளர விட்டால் அடுத்த வருடத்தில் வரும் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பக்கத்துக்கு வாய்ப்பாகி விடும் என்று அரசியல் தலைமைப்பீடம் பயந்தது.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் திரு. தினேஷ் குணவர்த்தனா ஆற்றிய உரை அரச பக்கத்தில் அச்சத்துக்கான தோற்றுவாயாக அமைந்திருக்கலாம்.

தளபதி டென்னிஸ் கொரேக்கடுவ இறந்து ஒரு வருடத்திற்குப் பின்னரும் வடக்கில் ஒரு வைக்கோல் துரும்பைக்கூடத் இராணுவத்தினரால் முன்னேற முடியவில்லை. இராணுவத்திற்கு அதற்கான அனுமதி, உத்தரவு இல்லை. ஆதரவு இல்லை என்பதே காரணம். அவர்களால் ஒரு மைல் முன்னேறுவதற்கு முதலாவிடமாவது ஓர் அடியாவது முன்னே செல்வதற்கு இராணுவம் ஊக்குவிக்கப்பட வேண்டும்—

(7 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் சுதந்திர சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவுடனான எல்லை தகராறுக்கு தீர்வுகாண முயற்சிக்கும் இந்தியா

உலகிலே அதிக சனத்தொகை கொண்ட நாடு சீனா. இரண்டாவது இடத்தை இந்தியா வகிக்கிறது.

இந்தியாவும் சீனாவும் உலக சனத்தொகையில் ஐந்தில் இரண்டு பகுதியினரை உள்ளடக்கி உள்ளன. அதேபோன்று உலகிலே பெரிய ஜனநாயக நாடாக — அதாவது தேர்தல் மூலம் மக்களாக தெரிவு செய்யப்படும் அரசாங்கம் பதவியில் இருந்து வரும் நாடாக இன்றும் இந்தியாவே இருந்து வருகிறது

இந்த இரு நாடுகளும் சமீபத்தில் — கடந்த மாத முற்பகுதியில் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன.

தொடர்புகளை ஏற்படுத்தி வைத்துக் கொண்டு அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுக்களையும் நடத்தி வந்தன. ஏற்கனவே — அதாவது 1962 யுத்தத்தில் பின்னர் பரஸ்பர நல்லெண்ண வகுதி அதிகாரிகள் மட்டத்திலான முன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகி உள்ளன

ஆனால் கடைசியாக நடந்த செப்டெம்பர் முற்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் முதல் தடவையாக இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினையை உள்ளடக்கி இருப்பதால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள பரஸ்பர உணர்வு தணிந்து உபாண்டத்தில் நெருக்கடி நிலை குறையும்

இந்த ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய அம்சம் படை விலக்கம் தான்.

ஏற்கனவே உள்நாட்டில் அரசியல் குழப்பங்களை எதிர்நோக்கி இருக்கும் நரசிம்மராவ் அரசுக்கு இந்த ஒப்பந்தம் பெரிதாக அரசியல் விமோசனம் எதனையும் பெற்றுக் கொடுக்கப் போவதில்லை. ஏனெனில் பெருப்பான்மை இந்திய மக்களுக்கு கடந்த பல ஆண்டுகளாக சனை மற்றுப் போய்க்கிடந்த இந்த எல்லைத் தகராறில் அக்கறை கிடையாது. ஏனெனில் இந்திய - சீன எல்லைப் பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை போன்று தொடர்ந்து ஓர் யுத்த நெருக்கடியில் இருந்து வரும் பிரச்சினை அல்ல.

திபெத் விவகாரம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பிரச்சினைகளில் திபெத் பிரச்சினையும் ஒன்றாகும். 1951ம் ஆண்டு சீனா திபெத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது: 1959ம் ஆண்டு திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா இந்தியாவுக்கு தப்பி வந்து அரசியல் அடைக்கலம் பெற்றார்.

சமீபத்தில் நரசிம்மராவுக்கும் லீபெங்குக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் தலாய்லாமா விவகாரமும் ஆராயப்பட்டது. இந்தியாவில் தலாய்லாமாவுக்கு ஆன்மீகத் தலைவர் அந்தஸ்தை மட்டுமே வழங்கப்படுகிறதாக நரசிம்மராவ் அப்போது தெரிவித்திருந்தார்.

திபெத் பிரச்சினை, தலாய்லாமா பிரச்சினை ஆகியவையே படிப்படியாக நெருக்கடியாக உருவெடுத்து 1962 இல் எல்லை யுத்தமாக வெடித்திருந்தது.

ஆகவே இந்தியாவும், சீனாவும் தமது முழுப்பிரச்சினைகளையும் பேசித்தீர்க்காத வரை உபாண்டத்தில் அமைதி ஏற்படமாட்டாது.

★

முட்டுக்கட்டை நிலையை அகற்றவே தற்போதைய ஒப்பந்தம் உதவும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆர். எல். பாத்தியா (R. L. Bhatia) சீன வெளிவிவகார அமைச்சர் ஜியாங் ஜூயான் (Tang Jiaxuan) ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்திய பிரதமர் நரசிம்ம ராவ்(Narasimharao) உத்தியோக பூர்வ சீன விஜயத்தின் போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம், சமீபத்தில் வாஷிங்டனில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்துக்கும் இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ரபினுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் போன்று சரித்திர பிரசித்தி பெற்றிட முடியாது.

எனினும் கடந்த முப்பது வருட காலமாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் இருந்து வரும் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணும் அடிப்படை முயற்சியாக இதனைக் கருதலாம்.

1962 சீன - இந்திய யுத்தத்தின் பின்னர் கடந்த காலங்களில் இந்தியாவும் சீனாவும் மிகக் குறைந்த அளவில் தொடர்புகளை ஏற்படுத்தி வைத்துக் கொண்டு அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுக்களையும் நடத்தி வந்தன. ஏற்கனவே — அதாவது 1962 யுத்தத்தில் பின்னர் பரஸ்பர நல்லெண்ண வகுதி அதிகாரிகள் மட்டத்திலான முன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகி உள்ளன

ஆனால் கடைசியாக நடந்த செப்டெம்பர் முற்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் முதல் தடவையாக இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினையை உள்ளடக்கி இருப்பதால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள பரஸ்பர உணர்வு தணிந்து உபாண்டத்தில் நெருக்கடி நிலை குறையும்

4,000 கிலோ மீற்றர் எல்லை

இந்திய 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. சீனாவில் 1949 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டது இந்த இரு நாடுகளும் 4,000 கிலோ மீற்றர் நீளமான எல்லையைக் கொண்டுள்ளன.

இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு தமது ஆட்சிக் காலத்தில் சீனாவுடன் யுத்தம் ஒன்று ஏற்படுவதை கடைசிவரை தவிர்த்தே வந்தார். 1954 ஆம் ஆண்டு அவர் சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு அந்த நாட்டுடன் நட்புறவுக் கரம் நீட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையில் பிரபல்யமான பஞ்சசீலக் கொள்கை அப்போதே பிரகடனம் செய்யப்பட்டது.

1. பிராந்திய ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றுக்கு மதிப்பு அளிப்பது,
2. ஆக்கிரமிப்பு இன்மை,
3. தலையீடின்மை,
4. சமத்துவம் பரஸ்பர நன்மைகள்,
5. சமாதான சகவாழ்வு.

ஆகியவற்றை இது உள்ளடக்கி இருந்தது பிரபல்யம் வாய்ந்த இந்தி - சினி பாய் பாய் (Hindi - Chini Bhai-Bhai) என்ற கோஷமும் அப்போதே எழுப்பப்பட்டு வந்தது.

எனினும் அடுத்த எட்டு வருடத்துக்குள் இந்த உறவுகள் எல்லாம் சீரழிந்து விட்டன. 1962 இல் எல்லை யுத்தம் வெடித்தது.

மிகக்குறுகிய காலம் மட்டும் நடைபெற்ற இந்த யுத்தம் நேருவின் ஆட்சிக்கும் அரசியல் அந்தஸ்துக்கும் பலமான அடியாக அப்போது கருதப்பட்டது. நேருவின் நம்பிக்கைக்கு உரியவரும் அப்போதைய பாதுகாப்பு அமைச்சருமான கிருஷ்ணமேனன் தனது பதவி இழக்க வேண்டியும் ஏற்பட்டது.

சீனா இந்தியாவிடம் 90 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணமுள்ள பகுதியை இன்னும் உரிமை கோரி வருகிறது. இந்தப் பிரதேசம் இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சலிலும் (Arunachal) சிக்கிமிலும் (Sikkim) உள்ளன.

அதேபோன்று இந்தியா சீனாவிடம் 33 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணமுள்ள பகுதியை இன்னும் உரிமை கோரி வருகிறது. இந்த பிரதேசம் ஜம்மு-காஷ்மீருக்கு வடக்கே உள்ள அக்சாய்ஷின் (Aksai Chin) பகுதியில் அமைந்துள்ளது இரு நாடுகளும் நெருங்கிய முக்கிய தடைக்கல்லாக இருப்பது இந்த பிரச்சினை தான்

சோவியத் யூனியன் உடைந்து இந்தியா தனது நண்டகால நட்பு நாடு ஒன்றை இழந்த நிலையில் இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ்வின் சீன விஜயம் இடம் பெற்றிருந்தது.

1954 இல் நேருவின் விஜயத்தின் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்திருந்தது இது இரண்டாவது தடவை ஆகும். நரசிம்மராவ்வின் விஜயத்துக்கு முன்னர் ராஜீவ்காந்தி சீனாவுக்கு விஜயம் செய்திருந்தார். ராஜீவ் காந்தியின் சீன விஜயம் அவரது பாட்டனார் நேருவின் விஜயத்தின் பின்னர் 34 ஆண்டுகளின் பின்னர் இடம்பெற்றிருந்தது

நரசிம்மராவ் தமது சீன விஜயத்தின் போது சீனப் பிரதமர் லீபெங் (Li Peng) மற்றும் 89 வயது நிரம்பிய டெங்சியாபிங்கின் (Deng Xiaoping) வாரிசாகக் கருதப்படும் ஜியாங் செமின் (Jiang Zemin) ஆகியோருடன் விரிவான பேச்சுக்கள் நடத்தி இருந்தார். இவர்கள் முன்னிலையிலேயே சீன - இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எந்த ஓர் உறுதியான அம்சத்தையும் கொண்டிருக்கவில்லை. எனினும் பிரச்சினைக்குரிய எல்லைப் பகுதியில் இருந்து இரு தரப்பினரும் தமது படைகளை இறிது தூரம் விலக்கிக் கொள்வதற்கு வழிவகுக்கிறது

—சஞ்சாரன்—

சூரிய காந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

வெளி உலகில்

BITSMANS

கல்வி நிறுவனம்

மானிப்பாய்.

A/L 94

கணக்கியல்

ஆசிரியர்:

N. ராஜன்

B Com. (Hons

M. A. A. T. (S. L.)

(பாடத்திட்டம் ஒரு வருடத்தில் பூர்த்தி செய்யப்படும்)

ஆரம்பம்:

05 - 10 - 1993

செவ். 5.00 p m

(பி 6162)

வாழ்த்துகின்றோம்

மிருதங்க அரங்கேற்றம்

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பல்துறை விற்பன்னரும், நன்மாணாக்கனும் ஆகிய

இளங் கலைஞன் செல்வன்

பத்திநாதர் யூட் ஜெமில்ராஜ்

அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் சிறப்புற வாழ்த்துகின்றோம். எதிர்காலம் கலைவளம் மிக்கதாய் மிளிர ஆண்டவனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றோம்,

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக அலுவலர்கள்,
பாடசாலை அபிவிருத்தி சபை,
பழைய மாணவர் சங்கம்.

புனித ஹென்றி அரசர் கல்லூரி,
இளவாலை,
மானிப்பாய்.
03 - 10 - 93 (பி-6165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இன நலன்
மாநகர
யாழ்ப்பாணம்

வாழப்பாடியின் கார் அருகே நின்று சிவராசனும் தனுவும் பிடித்த படம்!

சென்னையில் நடைபெற்று வரும் ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பான நீதிமன்ற விசாரணையின் தொகுப்பினை சென்னையில் இருந்த வெளியாகும் சஞ்சிகை ஒன்று வெளிட்டுள்ளது புலிகளின் தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞர் திரு. துரைசாமி அந்த சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்த அந்த விவரங்களை இங்கு தருகின்றோம்.

தனுவின் துண்டான தலை. ஹரிபாபுவின் காமெரா. இந்த இரண்டும் தான் ராஜீவ் கொலையில் சி.பி.ஐக்கு கிடைத்த தடயங்கள். இந்தச்சின்ன தடயங்களைக் கொண்டே சதிக்குக் காரணமானவர்களை கண்டு பிடித்தது சி.பி.ஐ. இப்போது சி.பி.ஐ. தன்னுடைய அந்த வேலையையும் முடித்து விட்டது; அவர்களுடைய பொறுப்பு, பிடிபட்டவர்களை குற்றவாளிகளென சட்டரீதியாக நிரூபிப்பது.

இதற்கெனவே அமைக்கப்பட்ட தனிக் கோர்ட்டில் விசாரணை ஆரம்பமாகி விட்டது. சி.பி.ஐ தரப்பில் ராஜமாணிக்கம் உட்பட ஆறு வழக்கறிஞர்கள். குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் தரப்பில் தி.க. தலைவர்களில் ஒருவரான துரைசாமி உட்பட ஐந்து வழக்கறிஞர்களுடன் வழக்கு விசாரணை கடந்த ஏப்ரல் மாதம் பூந்தமல்லி தனிக் கோர்ட்டில் ஆரம்பமானது. கோர்ட்டில் நடந்த வழக்கு விசாரணையை வழக்கறிஞர் துரைசாமி விவரித்தார்.

புலிகள் செய்த குற்றங்களை சி.பி.ஐயின் வழக்கறிஞர் ராஜமாணிக்கம் விவரித்துக் கொண்டே போக கண்டிலேறி நின்றவர்கள் பதற்றம் அடைந்தனர். ஆங்கிலம் எங்களுக்கு தெரியாத மொழி; தமிழில் சொல்லுங்கள் என்று கோரிக்கை வைத்தனர். ஆமாம்... தமிழிலேயே சொல்லுங்கள் என்று ஆமோதித்து உத்தரவிட்டார் நீதிபதி.

உத்தரவைத் தொடர்ந்து சி.பி.ஐயின் வழக்கறிஞர் டேனியல் ஜேக்கப் மேடைத் தமிழில் 'உரை'யாற்றத் தொடங்கினார். சிவராஜனைப் பற்றி அவர் பேசத் தொடங்கும் போது, 'சி.பி.ஐ. கிடுக்கிப் பிடி போட்டது சிவராஜன் ஓடினான்... ஓடினான்... வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினான்' என்று சொல்ல புலிகள் தரப்பில் வாதாடும் வழக்கறிஞர்களிலிருந்து இதற்குக் கடுமையான கலைஞர் வசனம் என்று விமர்சனம் எழுந்தது.

புலிகளுக்கோ ஆவேசம். குற்றம் இன்னும் நிரூபிக்கப்படவே இல்லை. எனவே சிவராஜனை அவன் இவன் என்று ஏகவசனம் பேசி அழைக்க வேண்டாம் என்று சீற, பாவம் சி.பி.ஐ வழக்கறிஞர்கள் மரியாதையாகப் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

ஒரு கட்டத்தில் தனு ராஜீவ் கொலையை கச்சிதமாக செய்து முடிக்க ஒரு கோயிலில் வேண்டிக் கொண்டதாக டானியல் ஜேக்கப் சொல்ல, எழுந்தது கண்டனம். அப்படியானால் அவன் வேண்டிய கடவுளிடம் தான் அது பற்றி விசாரிக்க வேண்டும் என்றார் எதிர் தரப்பு வக்கீல்.

இன்னொரு கட்டத்தில் டானியல். சிவராஜனுக்கு பேபி கப்பிரமணியம் கடிதம் கூட எழுதியிருக்கிறார். அந்த கொண்டார். நல்லவேளை செங்கோட்டையன் தப்பித்தார்.

ராஜீவ் கொலை நடந்த அந்த இரவில் பேரறிவாளனும், பாக்கியநாதனும் சினிமா பார்த்தனர் என்று சி.பி.ஐ தரப்பு சொல்ல, ஒரு முக்கியமான கொலையை நடத்த திட்டமிடும் போது ஒருவன் எப்படி சினிமா பார்க்க போவான் என்று துரைசாமி கேட்க கோர்ட்டில் பலமான சிரிப்பொலி.

கொலை நடப்பதற்கு முன் தனுவுக்கு பேரறிவாளன் பாரீஸ் கார்னர் கடையொன்றில் பற்றரி வாங்கிக் கொடுத்தான். அந்த பற்றரிதான் ஐந்து மணி நேரம் கட்டிக் கொண்டு ஸ்ரீ பெரும்புதூர் வந்தான் என்றார் சி.பி.ஐ. வக்கீல்.

உடனே புலிகள் தரப்பு வக்கீல், சரி... பேரறிவாளன் பற்றரி வாங்கியது குற்றம் தான் கொடுத்தது. அப்படி தனிக்கை செய்யப்பட்ட பகுதியில் சிவராஜன் வாழப்பாடி வீட்டுக்குப் போனது. அவரது டிரைவருக்கு பணம் கொடுத்தது வாழப்பாடி வீட்டு சமையல்காரருக்கு சன்மானம் கொடுத்தது என்று எல்லா விவகாரங்களும் இருக்கிறது.

புலிகள் தரப்பில் இன்னொரு கேள்வி, ராஜீவ் கொலை நடந்தது இரவு 10-15க்கு இது நடந்த இரண்டு மணி நேரத்திலேயே (12 மணிக்கு) ராஜீவ் கொலையை எதிர்பார்த்தே இருந்தது போன்று அரக்கோணத்தில் காங்கிரஸ்கட்சி ஒரு பரபரப்பான போஸ்டரை ஒட்டியதே! இது எப்படி! இது முன்கூட்டியே நடத்திய சதியின் அடிப்படையில் முன்பே போஸ்டர் அடிக்கப்பட்டது தானே! இல்லையேல் அந்த இரவு நேரத்தில் எந்த அச்சகம் திறந்திருக்கும் அப்

ராஜீவ் கொலை வழக்கில் திருப்பம் தருமா?

கடிதத்தில் தமிழீழ முயற்சிகள் நடந்து வருகின்றன விரைவில் வெகுவிரைவில் திருமணம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இது முக்கிய ஆதாரம் என்று சொல்ல, எதிர்த்தரப்பினர் விடவில்லை. இவர்கள் மீது பற்றுக் கொண்டவர்கள் இவர்கள் தெரிவிப்பதில் தவறில்லை. எம்.ஜி.ஆர். பதவியிலிருந்த காலத்தில் புலிகளுக்கு நிதியாக 1 ரூபாய் வசூலிக்கப்பட்டது. அந்த ஒரு ரூபாயை அரசு ஊழியர்கள் அத்தனை பேரும் கொடுத்தார்கள். ஏன் இதோ இங்கே நமக்கு தீர்ப்பளிக்கும் நீதிபதியும் கொடுத்தார். அப்படியானால் 1 ரூபாய் நிதியளித்த நீதிபதியும் புலிகளுக்கு உதவிய குற்றம் செய்தவர் தானே என்று சொல்ல வரவிடத்தது சி.பி.ஐ தரப்பு, என்றாலும் கூட அதுவும் தற்காலிகம் தான்.

காந்தியைக் கொன்றவன் காங்கிரஸ்காரனல்ல; இந்திரா காந்தியை கொன்றவன் காங்கிரஸ்காரன் அல்ல. ராஜீவ் காந்தியைக் கொன்றவன் காங்கிரஸ்காரன் என்று ஒரு பொதுக்கூட்டத்தில் அமைச்சர் செங்கோட்டையன் பேசியிருக்கிறார். எனவே செங்கோட்டையனையும் இந்த விவாதங்களில் சாட்சியமளிக்க வேண்டும் என்று நான் சொல்ல, கோர்ட்டிற்கு ஓடி வந்தார் செங்கோட்டையனின் வக்கீல் ராமரத்னம். பத்திரிகைகளில் வந்தவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று வாதிட நீதிபதியும் ஏற்றுக்

மென்றால் அவை விற்றது குற்றம் தானே! சரி அப்படியே பற்றரி வாங்கினாலும் அந்த பற்றரி தான் பயன்படுத்தப்பட்டது என்பது எப்படி தெரியும்? என்றார்.

சுபாகந்தரம் ராஜீவ் இறந்தவுடன் காமெராவை எடுக்க ஓடினாரே. கொலையாளிகளின் படங்களை மறைக்கத் தானே ஓடினார் இப்படி சி.பி.ஐ தரப்பு கேள்வி எழுப்ப இல்லை இல்லை செய்திகளை முன் கூட்டியே அறியும் ஆர்வம் எல்லா பத்திரிகையாளர்களுக்கும் உண்டு. அதற்காகத் தான் அவர் காமெரா எடுக்க ஓடினார் என்றார்.

இப்படி வாதங்களை எழுப்பி சி.பி.ஐயை அதிர வைத்து கொண்டிருக்கும் புலிகளின் தரப்பு வக்கீல் சி.பி.ஐக்கு மேலும் மேலும் அதிர்ச்சிகளை தந்த வண்ணம் இருக்கிறார்.

ராஜீவ் தனது பிரசாரத்தை விசாகப்பட்டினத்தோடு நிறுத்திக் கொள்வதாக இருந்தார். ஸ்ரீபெரும்புதூர் வருவதாகவே இல்லை. அவரை இழுத்து வந்தது டில்லி காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் மனேஜர் கல்யாணராமன். இந்தத் தகவல் வெளியே வந்த சில நாட்களில் காங்கிரஸ் மேலிடம், அப்படியொரு நபரே இல்லை என்று மறுத்தது. ஆனால் கோர்ட்டில் இந்த விசயத்தைச் சொன்ன ஆதிரை, சிவராஜன் கல்யாணராமனைப் பற்றி அடிக்கடி பேசியதாக சொல்கிறார். இந்த விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி மேலிடம் எதையோ மறைக்கிறது. கல்யாணராமனின் விலாசம் சிவராஜன் டயரியில் இருந்தது. இப்போது கல்யாணராமன் விடயம் வெளிச்சத்திற்கு வராமல் தடுக்க கடந்தப்பட்டுகிறது வைக்கப்பட்டிருக்கிறார் என்கிறார்கள்.

சிவராஜன் டயரியில் நிறைய விஷயங்கள் இருக்கின்றன. அதை குற்றவாளிகளுக்கும் வக்கீல்களுக்கும் சி.பி.ஐ. கொடுக்கும் போது பல பகுதிகளை தணிக்கை செய்து

படியே திறந்திருந்தாலும் இவ்வளவு குறைந்த நேரத்தில் ஒரு போஸ்டர் அச்சடிக்கும் வாய்ப்பிருக்காது என்கிறது.

இந்த வழக்கில் பிரபாகரன் கேண்டுமென்றே சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறார் என்கிறது புலிகள் தரப்பு. பிரபாகரனை அடுத்த சேர்க்கப்பட்டிருக்கும் புலிகளின் உளவு அமைப்புத் தலைவர் பொட்டு அம்மான். மாவீர் பிரிவுத் தலைவர் அகிலா இருவரும் கற்பனைப் பாத்திரங்கள். புலிகளில் அப்படிப்பட்ட ஆளே இல்லை. இதுபற்றிய ஆதார பூர்வமான தகவலை கோர்ட்டில் வெளியிடுவோம் என்கின்றனர் புலிகள் தரப்பு வழக்கறிஞர்கள்.

இந்த இடுக்கிடும் வாதங்களிடையே ஒரு போஸ்டோ விடயம் காங்கிரசாரை கலக்கியிருக்கிறது. ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட விஜயன் மற்றும் விஜயன் மனைவி செல்வலக்ஷ்மியிடம் சி.பி.ஐ. விசாரிக்கும் போது வாழப்பாடியின் கார் அருகே சிவராஜனும் தனுவும் நின்று கொண்டிருப்பது போல் ஹரிபாபு எடுத்த படத்தைக் காட்டி அருவிபிருக்கிறது. இந்த போட்டோ விடயம் காங்கிரசாரை கலக்கியிருக்கிறது. இந்த போட்டோ ராஜீவ் கொலை வழக்கில் ஒரு திடீர் திருப்பத்தை ஏற்படுத்தலாம் என்கிறது சி.பி.ஐ வட்டாரம்.

அதோடு ராஜீவ் கொலை பற்றி செங்கோட்டையன் பேசியதை குற்றவாளிகள் தரப்பு சாதாரணமாக எடுத்து கொள்ளவில்லை. செங்கோட்டையன் பேசினால் நிறைய விடயம் வெளிவரும். ஆனால் அவர் பேச மறுக்கிறார் என்கிறார்கள்.

சி.பி.ஐ. வட்டாரத்திலிருந்து சமீபத்தில் கிடைத்த பழைய தகவல்... ராஜீவ் கொலை பற்றி இலங்கையிலிருக்கும் சிவராஜனின் தாயார் தேவநாயகி மற்றும் சிவராஜனின் சகோதரி, சகோதரர் போன்றவர்களும் விசாரிக்கப்பட்டிருக்கிறார்களாம். விசாரணையில் புது தகவல்கள் எதுவும் சிக்கவில்லை.

இது தவிர சி.பி.ஐக்கு புதுப் புது கேள்விகளை எழுப்பியிருக்கிறது புலிகள் தரப்பு. ராஜீவ் வழக்கில் சாட்சி சொன்ன குமுதவல்லி ஒரு தாடிக்காரரைப் பற்றி சொன்னியிருந்தார். அந்த தாடிக்காரர் யார் என்ன என்பதை சி.பி.ஐ இன்னும் விசாரணைக்கே உட்படுத்தவில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது பிடிபட்டிருக்கும் யாரும் குற்றவாளிகளே இல்லை என்கிறார்கள் புலிகளின் வழக்கறிஞர்கள். குற்றவாளிகள் புலிகள் இல்லை. இவர்களை அவசரப் பட்டுத் தவிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்ட சென்னை தான் செய்திருக்கிறான். இதில் இந்தியாவிற்கு ஆதாத வெளிநாட்டு சக்திகள். காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி, மரகதம் சந்திரசேகர் போன்றோருக்கும் முக்கிய பங்குண்டு. புலிகளுக்கும் ராஜீவ் கொலைக்கும் சம்பந்தமில்லை. குற்றவாளிகள் இன்னும் சரியாக கண்டு பிடிக்கப்படவில்லை.

யார் அந்தக்குற்றவாளிகள் என்று கேட்டால், அதை சி.பி.ஐ தான் கண்டு பிடிக்க வேண்டும் என்கிறார்கள் புலிகளின் வக்கீல்கள்.

வக்கீல்களின் இந்த திடுக்கிடவைக்கும் வாதங்களை கேட்டு சி.பி.ஐ. தரப்பு அதிர்ச்சியடைந்திருக்கிறது. சி.பி.ஐ. தரப்பு இதை எப்படி சமாளிக்கப் போகிறது என்பது இனி வரும் நீதி மன்ற விசாரணையில்தான் தெரியும்.

★

பிற்போடப்பட்டுள்ளது

பட்டப்பின் படிப்பு கல்வி டிப்புளோமா பகுதிநேரம்

ஆண்டு -2 மாணவர்களின் (08-10-1993) குரியிற்றுக் கிழமை இன்று ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்று கூடல் வைபவம் தவிர்க்முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

– விழாக்குழு.

(B7528)

அரசசார்பற்ற நிறுவனங்கள்

கிளிநொச்சியில் தங்கியுள்ள பயணிகளுக்கு உதவும்

வாழ்ப்பாணம், ஒக். 8

வாழ். குடாநாட்டுக்கு வர முடியாது கிளிநொச்சியில் தங்கியுள்ள பயணிகளுக்கு தினமும் உணவு வழங்க கிளிநொச்சிக் கோட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

இது தொடர்பான கூட்டம் ஒன்று கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சர்வோதயம், ஒக்ஸ்பாம், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆகியன பங்கு கொண்டன.

பிரயாண வசதியற்ற தவிக்கும் மக்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிறுவனம் உணவு வழங்கும். (த-8)

துண்டுப் பிரசுரம்

தென்மராட்சி, ஒக். 8

காந்திஜெயந்தி (கொலரா) நோய்த் தடுப்புமுறை பற்றிய துண்டுப் பிரசுரம் சாவகச்சேரி நகரசபையினரால் வெளியிடப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

(த-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

வித்பனைக்கு

விறாந்துக் குஞ்சுகளும், இறைச்சிக் கோழிகளும் வித்பனைக்கு உண்டு. இறைச்சிக் கோழிகள் உடன் சந்தம் செய்து கொடுக்கப்படும். இல. 09, சந்தையடி வீதி, குரானதெரு, சுன்னாகம். (6674)

நல்ல இன அழகிய வெள்ளநிற பொமரேனியன் நாய்க்குட்டியும், கொக்கரடியன், காப்பிலி, பாமாக் கோழிக்குஞ்சுகளும் உடன் வித்பனைக்குண்டு. தொடர்பு: V. M. பாக்கியநாதன், கோகன் வீதி, கோண்டாவில் மேற்கு. (27527)

பணிப்பெண் தேவை

டாக்டர் விக்கினராஜன் குடும்பத்திற்கு எல்லா வேலைகளையும் விருப்பத்துடன் செய்யக்கூடிய 18-35 வயதுக்குட்பட்ட நல்ல குடும்பத்தில் உள்ள, கிறாபனத்திற்கு கவர்ச்சியான பெண் தேவை. ஆரம்ப சம்பளமாக சாப்பாடு பிறவசதிகளும் 300/= வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்க: டாக்டர் விக்கினராஜன், சண்டிலிப்பாய் A. G. A. சந்தோருக்கு சமீபம், சண்டிலிப்பாய். (6515)

மணமகள் தேவை

வயது 32, திருகோணம், செவ்வாய் தோஷம் பிடிக்கடமை புரியும் B. Sc. எஞ்சினியருக்கு பதுத்த, அழகான பெண் தேவை. வீடு கொழும்பில் எதிர்பார்க்கப்படுகிறது. V. யோகலிங்கம், பாலமுருகன் திருமண சேவை, தாவடி. (27518)

(O/L) MATHS

Distinction பெறுபேறுடைவதற்கு 26 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து சகல Sectionகளும் Portionகளும் நிறைவேற்றப்பட்டு Section & Portion Revision உடன் Past Papers Practiceம் அளிக்கப்படும். ஆறுமுக நாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (6514)

G. C. E. (A/L) விஞ்ஞானம்

94ஆம் ஆண்டு மிட்டல் வகுப்புகள் 9/10 இல் ஆரம்பம். கடந்த கால வினாவிடை உட்பட பயிற்சிகள் 95ஆம் ஆண்டு வகுப்புகள் நடைபெறுகின்றன. எஸ். செல்வநாயகம் B. Sc. Dip-in-Ed இணுவில் தெற்கு, இணுவில். (6675)

"சக்தி"

"சக்தி" ஓர் இயற்கைப் பசளை. கேப்பமிளைப் பழுத்தலும், மாட்டுச்சாணமும், சளமும் கொண்டு தயாரித்த கட்டெரு. பைக்கற் ஒன்று ரூபா. 9/-. 100 பக்கற் ரூ. 800/- மட்டுமே. வீட்டுத் தோட்டம், பூந்தோட்டங்களுக்கு ஓர் வரப்பிரசாதம். அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. "மிக்கவை". (இ-5986)

பயிற்சி வினாத்தாள்கள்

5ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் (O/L) ஆண்டு வகுப்புகளிற்கான அனைத்து பாடங்களுக்குரிய மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். அடுத்த வெளியீடு: 10-10 93. Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். (27510)

புலமைப் பரிசில் பரீட்சை

தேசிய பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமையில் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்தி மீளக் கொடுக்கப்படும். Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். (27508)

1993இல் நடந்த பரீட்சை உட்பட 8 வருட கடந்த கால வினா-விடைத் தொகுப்பு வெளியாகியுள்ளது. அனைத்து புத்தக நிறுவனங்களிலும் வாங்கக் கொள்ளலாம். தொகுப்பு: Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். (27509)

அனுமதிப் பரீட்சை

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கு நடத்தப்படும் அனுமதிப் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்தி மீளக் கொடுக்கப்படும். Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். (27507)

தமிழ் இலக்கியம்

ஆண்டு 10 –11இற்குரியது. கம்பராமாயணம், நாலடியார், இலக்கணம், கலைகிடுத்த ஓலை கொண்ட I—19 அலகுகள் உள்ளடக்கியது. ஆக்கம்: தமிழ்வேள். விலை 60/-. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. (இ-6163)

O/L கணிதம் - 93

Distinction, Credit பெறுபேறுடைய (மிட்டல்) முறைப்படியும் வினா-விடை முறையும் 80 வருட அனுபவமுள்ள B Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (27519)

மெடிக்கேற்றற் சோப்

மெடிக்கேற்றற் சோப் ஒரு விக்கலைத் தயாரிப்பு: தொற்று நோய்க்கிருமிகளிலிருந்து பாதுகாக்கும் காபோலிக் சேர்ந்தது மெடிக்கேற்றற் சோப். கட்டி ஒன்று ரூபா 8/- மட்டுமே. அண்ணா சோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. மிக்கவை. (இ-5977)

வெளிவந்துவிட்டது!

"மக்கள் நேசன் காரத்திகேசன் மாலையர்" - நூல் விலை ரூபா 85/- வி. சிவத்தம்பி சம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை. (27522)

இலவமரம்

இலவமரம் விற்பனைக்கு உண்டு. திருமதி நடராஜா, சங்கானை வீதி, (துணைவிச் சந்திக்கருகில்), சங்கரத்தை. (6511)

மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தேர்ச்சி வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டுத் தரப்படும் கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (27499)

இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக் கோழிகள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8-30—11-00 வரை கத்தரிசெய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் விடியோ சென்டர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27513)

உடுவில் மகளிர் கல்லூரி
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு

★ B. A. Part – I ★ B. A. Part – II ★ G. A. Q.

யாழ்ப்பாண, பேராதனை பல்கலைக்கழக விரிவுரைகள்

ஆரம்பம்:— 04 — 10 — 1993
திங்கள் 3-00 மணி

விரிவுரையாளர்கள் குழு

பொருளியல்:- திரு. S. வரதராஜன் B. A. (Hons)
தமிழ்:- திரு. S. கணேசலிங்கம் B. A. (Hons)
இந்துநாகரிகம்:- திருமதி K. பவதிக்கம் B. A. (Hons)
கிறிஸ்தவ நாகரிகம்:- வண. அ. ஜெயக்குமாரன்
அரசியல்:- திரு. K. செல்வரமணன் B. A. (Hons)
மெய்யியல்:- திரு. S. S. மனோகரன் B. Com

(இ/5991)

தமிழ் மக்களைக் காக்க இறையருள் வேண்டி
விடி விளக்குகள் - 108

சுழிபுரம் - பறாளை
முருகன் தேவஸ்தானத்தில்

நாளை திங்கட்கிழமையன்று (04 - 10 - 1993) கார்த்திகைத் திருவிழா நடைபெறும். அன்று பிற்பகல் 3-00மணியளவில் முருகப்பெருமானுக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பின்னர் முருகப்பெருமான் வீதி உலாவருவார்.

மாலை 5 30 மணியளவில்:
தெய்வீகச் சொற்பொழிவு

ஆரம்பித்து வைப்பவர்:
பிரம்மஸ்ரீ சு. ஷண்முகரத்ன சர்மா
(பூஜா பரம்பரை)
"சிவத்தமிழ் வித்தகர்"
சிவ. மகாலிங்கம் B. A. Dip-in-Ed.
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
"குருவாய் வருவாய்"

இரவு 7மணியளவில்:
தமிழ் மக்களைக் காக்க
இறையருள் வேண்டி 108 விடி விளக்குகள் ஏற்றி வைக்கப்படும்

★ அனைவரையும் அழைக்கின்றோம் ★

கார்த்திகைத் திருவிழா உபயகாரர்,
சோழியூரான், பத்மநாயகி, சோழலக்ஷ்மி,
சோழகுமாரன், சோழராஜன்.

(27517)

ஓராண்டு நினைவஞ்சலி



ஸ்ரீமான்
கற்பர் ஆழ்வாப்பிள்ளை
(கிளிநொச்சி நாதன், சஜன் உரிமையாளர்)

தோற்றம்: 19 — 04 — 1914 மறைவு: 14 — 10 — 1992

திதி: 03 - 10 - 1993

ஆண்டு ஒன்று ஆகின்றாலும், உங்கள் அன்பு எம்மை விட்டகலாது. உங்கள் ஆசியும் அறிவுரைகளும் இன்றும் எம்மை வழி நடத்திச் செல்லுகின்றன.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பிட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

பார்வதி பவனம்,
வதிரி. (27476)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

உவர் நிலத்தில் மர நடுகை

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கடற்கரைச் சார்ந்த வயல் நிலங்கள் உவராக மாறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட முன்னேற்பாடுகள் நடைபெறுவதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

வயல் நிலங்களில் உவர்த் தன்மை சென்றடைவதைத் தடுக்கும் பொருட்டு மரநடுகை மேற்கொள்வதே உத்தேசத் திட்டமாகும். உவர்த் தன்மையை உறிஞ்சி இழுத்து வளரக்கூடிய சவுக்கு, இலுப்பை, பனை ஆகிய மரங்களை நடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இது ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். ஏனைய பகுதிகளுக்கு முன்னுதாரணமாகவும் முன்னோடியாகவும் விளங்கக் கூடியது.

குடாநாடு கடலால் சூழப்பட்ட பிரதேசம். அதன் காரணமாக கடற்கரையை ஆண்டுள்ள பெரும் நிலப்பரப்பு உவர் தன்மை நிறைந்து காணப்படுகிறது. அந்த நிலப்பகுதியை மக்கள் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்துவதில்லை. அவற்றில் விவசாயம் செய்தாலும் போதிய விளைச்சல் கிடைப்பதில்லை.

குடாநாட்டைச் சுற்ற வரவுள்ள உவர் நிலப் பிரதேசத்தை மர நடுகை மூலம் சீராக்கினால் விவசாய உற்பத்தியை பல மடங்காக்கலாம். உவர்த் தன்மையை சகித்து அல்லது எதிர்கொண்டு விளைவிக்கக்கூடிய பயிரினங்களை இனங்கண்டால் இன்னும் பேருதவியாக இருக்கும். இது குறித்து விவசாயப் பகுதியும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடமும் பெரிதும் உதவ முடியும்.

உவர்த் தன்மையை நீக்குவதற்காக மரநடுகை செய்வதன் மூலம் குடாநாட்டு மக்களின் விறகுத் தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்ய வழிபிறக்கும் அல்லவா?

அனேகமாக எல்லாப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் கடற்கரைகளும் அவற்றை ஒண்டிய வயல் நிலங்களும் உள்ளன ஆகையால்—

வலி - மேற்கு பிரதேச செயலர் பகுதியின் முன்னுதாரணத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளும் பின்பற்றவேண்டும்.

கடற்கரையை ஒண்டிய, நிலப்புலங்களில் மரம் நட்டு, உவர்த் தன்மையை நீக்கி, விவசாயக் காணிகளாக்கும் செயற்திட்டத்தை குடாநாட்டின் விசேட ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

அது பன்முகப் பயன்தர வல்லது. விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு உறுதுணையாக விளங்க வல்லது மட்டுமல்ல. மரநடுகை பலருக்கு வேலை வாய்ப்பையும் தரும். ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தக்கூடியது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் தமது கவனத்தைச் செலுத்தட்டும்.

வடக்கு - கிழக்கு மாணவரின்

பல்கலைக்கழக அனுமதி முறையை மீள்பரிசீலனை செய்ய கோரிக்கை

கல்வி அமைச்சருக்கு துணைவேந்தர் கடிதம்

யுத்த நெருக்கடி மிகுந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களின் 1993-94 ஆம் ஆண்டுக்குரிய பல்கலைக் கழக அனுமதி சம்பந்தமான கொள்கையை மீள் பரிசீலனை செய்யுமாறு—

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் கல்வி, உயர் கல்வி அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

யாழ். மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்ற முடிவைத் தொடர்ந்தே உயர் கல்வி அமைச்சரிடம் இந்தக் கோரிக்கையை துணைவேந்தர் விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறு வீழ்ச்சி அடைந்துள்ளதற்கு காரணம் காட்டிய பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு யாழ். மருத்துவ பீடத்துக்கு குறைந்தளவு மாணவர்களையே அனுமதிக்கப் போவதாக அறிவித்திருந்தது.

இந்த நிலைமையை ஆராய்வதற்காக யாழ். பல்கலைக் கழக மூதவை இம்மாதம் 11ஆம் திகதி கூடியது. மாணவர்கள் பரீட்சையில் திறமையுடன் தேர்ச்சி அடைய முடியாமற் போனதற்கு கடந்த மூன்று வருடங்களாக வடக்கு-கிழக்கில் நிலவும் யுத்த நெருக்கடியே காரணம்என்று மூதவை கருதியது. அதனால் வடக்கு-கிழக்கு மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பது சம்பந்தமான கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பல்கலைக் கழக ஆணைக் குழுவுக்கும், உயர்கல்வி அமைச்சுக்கும் சிபார்சு செய்வதென மூதவை முடிவு செய்தது.

இம்முறை மாணவர்களை அனுமதிக்கும் போது குறிப்பிட்ட மாவட்டத்தில் இருந்து குறிப்பிட்ட தரத்து கடந்த 5 வருடங்களாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் சராசரி எண்ணிக்கைக்கு குறையாக அனுமதிக்கக் கூடாது என்றும் மூதவை சிபார்சு செய்துள்ளது

இந்தச் சிபார்சுகளைக் கவனித்தே பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ச.துரைராசா இப்போது கல்வி அமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாணவரின் கல்வி நிலை வீழ்ச்சி அடைந்தமைக்கான பின்வரும் ஏழு காரணங்களையும் துணைவேந்தர் தாம் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

★ மாணவர்கள் வீடுகளில் கல்வி பயில்வதற்கு இருந்த வசதி மிகச்சார விநியோகம் நிறுத்தப்பட்டதால் மிகப் பெரிதாகப் பாதிக்கப்பட்டது.

★ மண்எண்ணெய் போதிய அளவு கிடைக்காமையாலும், விலை உயர்வாலும் அதனைப் பெறுவதும் மாணவர்களுக்குக் கஷ்டமாக உள்ளது.

★ இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பல பாடசாலைகள் இயங்க முடியாத நிலை தோன்றியது.

★ மாணவர்கள் (மக்களும்) இடம்பெயர்ந்ததால் அவர்கள் வேறு பாடசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அதனால் சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை அளவுக்கு அதிகமானதால் கல்வி போதனையில் பாதிப்பு ஏற்பட்டது.

★ பாடசாலைகளில் உரிய முறையில் பாட போதனைகளை நடத்த முடியாத அளவுக்கு ஆய்வுகூட, தனியார் வசதியின்மைதோன்றியுள்ளது. பாட நூல்கள், சஞ்சிகைகள், அப்பியாசக் கொப்பிகள் என்பன உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. போதிய அளவும் கிடைப்பதில்லை.

★ போக்குவரத்துப் பாதிக்கப்பட்டதால் பாடசாலைகளுக்கு மாணவர் வரவு குறைவு. சைக்கிள் விலையும் மிக உயர்வாக இருப்பதால் அவற்றை வாங்க முடியாத நிலையும் தோன்றி உள்ளது.

★ ஜி.சி.ஈ உயர்தர வகுப்பில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் கொழும்பில் நடைபெறும் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகளுக்குச் செல்ல முடிவதில்லை. அதனாலும் மாணவருக்கான கல்வி போதனை பாதிப்பு. (அ-ச)

மண்எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நாளை திங்கள் முதல் தனது கிளைகள் மூலம் பாவனையாளர்களுக்கு மண்எண்ணெயை விநியோகிக்க இருக்கிறது.

பங்கீட்டு அட்டைக்கு லீற்றர் 25 ரூபாய்ப்படி ஒரு லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்படும். (இ-எ)

ஒப்பரேஷன் யாழ்தேவி...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று நினைக்கறியிருந்தார்.

அவரது பேச்சு அரசாங்கத்தையும் சரி இராணுவத்தையும் சினம் கொண்டு செய்தது. இந்த நிலை எதிர்க்கட்சிகள் மூலம் பரவி தென்னிலங்கை வாக்காளரைச் சென்றடைய கூடாது என்று அரசாங்கம் நினைத்தது. தாம் பலவீனமானவர்கள் என்று சொல்லக் கேட்க இராணுவத் தலைமைப் பீடத்துக்கு ஒரு புறம் வெட்கமும் மறுபுறம் ஆத்திரமும் வந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றுதல்

தேர்தலை நாடிய விஜேதுங்காவும், மானக் போராக நினைத்த இராணுவத்தினரும் கை கோர்த்தனர். விஜேதுங்கா, இனப்பிரச்சினையே இல்லை என்ற மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார். இராணுவக் கட்டமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. இதோ யாழ்ப்பாணத்தைப் பிடித்துக் காட்டுகிறோம் என்று இராணுவத் தலைவர்கள் "ரபதம்" எடுத்தனர்.

அவற்றின் - விளைவாக இளைஞரைப் பிடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் திட்டம் உருவாகியது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்பது இராணுவ உயர் மட்டாரங்களில் மட்டுமல்ல அரசியல் வட்டாரங்களிலும் ஒரு சர்ச்சைக்குரிய விடயம். இராணுவ அனுபவ சாலிகளைப் பொறுத்த வரையில் அது இலகுவானதல்ல என்றே தெரிவித்து வந்திருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளை வலுச்சண்டைக்கு இழுத்து அவர்களைத் தாக்குவது வீணானது என்றும் அந்த "தாக்கிவிட்டு ஓடும்" யுத்தி பிரயோசனமற்றது என்றும் அரசியல் தலைமைப் பீடமும் ஒரு காலத்தில் இராணுவத்துக்கு எடுத்துக் கூறியது.

இராணுவ நடவடிக்கைகள் மூலம் பிடிக்கும் இடங்களைத் தக்க வைத்துக் கொண்டு மெது மெதுவாக, படிப்படியாக முன்னேறுவதே நல்லது என்று அரசியல் தலைமைப் பீடம் அறிவுறுத்தியது. அதற்காக இராணுவக் கட்டமைப்பில் மாற்றம் செய்வதையும் மறந்து விடுவதற்கில்லை.

யாழ்ப்பாணத்தில் பிடிக்கும் இடங்களை எல்லாம் தக்க வைத்துக் கொண்டானால் படையணி பல மடங்காகப் பெருக்கப்பட வேண்டும் என்பது இன்று இராணுவ அதிகாரிகளின் கருத்தாக இருந்தது.

இராணுவத்தில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்கள் பின் நிற்கிறார்கள். சேர்ந்தவர்களும் விட்டு விட்டு ஓடிப் போய் தெற்கில் குற்றச் செயல்களைப் பெருக்குகிறார்கள். அப்படியிருக்கப் படையணியை அதிகரிப்பது எப்படி என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது.

யாழ்ப்பாணமே விடுதலைப் புலிகளின் பிரதான தலைமையகம் (அவர்களின் இருதயம் போல). அவர்களுடைய இராணுவ வளங்கள் யாவும் இங்கேயே உண்டு. அத்தகைய யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் விடுதலைப் புலிகளை பலவீனமாக்கி விடலாம் என்ற கருத்துடனேயே "ஒப்பரேஷன் யாழ் தேவி" யை இராணுவத்தினர் தொடங்கினர்.

ஆனால் இயக்கச்சிப் போரில் பேரிழப்பு என்றதும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது தமது நோக்கமல்ல என்கிறார்கள். சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று என்ற நிலையோடு, செய்வது ஒன்று சொல்வது மற்றொன்று என்ற குழப்ப நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே உள்ள மல்லிகைத் தீவிலே, புலிகள் பெரிய அதிரடியை நடத்தி வரலாறு படைத்தார்கள். அவரிகளின் இராணுவ வலம் குடாநாட்டிற்குள்ளேயே இருக்குமாயின் அது எவ்வாறு சாத்தியம் என்பதை இராணுவத் தலைமை அதிகாரிகள் பகுத்தாய்ந்திருந்தால் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதன் மூலம் புலிகளை ஒடுக்க முடியும் என்ற கருத்து நிலைக்கு வந்திருக்க முடியாது. ★

திகதி	இடம்	விமானத் தாக்குதலில் இறந்தோர்	ஷெல் தாக்குதலில் இறந்தோர்	காயமடைந்தோர்
28-09-93	சங்கத்தானை	20	—	04 (விமானத் தாக்குதல்)
28-09-93	நந்தாவில்	03	—	18 (விமானத் தாக்குதல்)
29-09-93	பளை	—	03	12 - (ஷெல் தாக்குதல்)
29-09-93	நவக்கிரி	—	07	11 - (ஷெல் தாக்குதல்)
29-09-93	கொட்டடி	—	—	01 - (ஷெல் தாக்குதல்)
29-09-93	கிளிநொச்சி	—	—	02 - (ஹெலி தாக்குதல்
30-09-93	சாவகச்சேரி நுணாவில்	01	—	06 - (ஷெல் தாக்குதல்)
01-10-93	நீர்வேலி	—	—	02 - (ஹெலி தாக்குதல்)
01-01-93	சாவகச்சேரி	—	—	09 (விமானத் தாக்குதல்)
		24	10	65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சிலைப் பள்ளி பகுதியிலிருந்து 820 குடும்பங்கள் வெளியேறின

வடமராட்சி, ஒக். 3

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை அடுத்து பச்சிலைப்பள்ளிப் பகுதியிலிருந்து சுமார் 820 குடும்பங்கள் வெளியேறி வடமராட்சி மற்றும் பிரதேசங்களில் தஞ்சமடைந்துள்ளன.

கோயில்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றில் இக்குடும்பங்கள் தங்கியுள்ளன.

பச்சிலைப்பள்ளியில் [உள்ள புளோப்பளை, பளை இத்தாவில், தம்பாகமம், மாசார், சேரன்பற்று, எழுதுமட்டுவாழ், ஆகிய கிராமங்களிலிருந்தே இவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் வடமராட்சி மற்றும் செம்பியன்பற்று, மாமுனை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரணப் பணியை செஞ்சிலுவைச் சங்கமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் மேற்கொண்டு வருகின்றன.

(இ-144-173)

92 ஜனவரிக்கு பின் கடந்த மாதமே அதிகபடையினர் பலி

யாழ்ப்பாணம், ஒக். 3

1993 ஜனவரி மாதத்தின் பின் இராணுவ நடவடிக்கை ஒன்றில் அதிக எண்ணிக்கையான படையினர் உயிரிழந்திருப்பது யாழ்தேவி நடவடிக்கையிலேயே எனக் கட்டிக் காட்டப்படுகிறது.

"யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையுடன் சேர்ந்து கடந்த செப்டெம்பர் மாதத்தில் மட்டும் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 170 இக்கும் அதிகமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

"யாழ்தேவி" நடவடிக்கையில் 150 இக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி நிலசெய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

உணவுப் பொருள்கள் போதிய அளவு கையிருப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

"உணவு நிலை குறித்து மக்கள் பீதியடைய வேண்டாம். போதிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன."

இப்படியான அறிவுறுத்தல் ஒன்றை யாழ். அரச அதிபர் திரு. எச். மாணிக்கவாசகர் மக்களுக்கு விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரிசி, மா, சீனி, பால்மா, பருப்பு சமுர்த்திக்காரம் ஆகியவை போதியளவு செயலகத்தில் கையிருப்பில் உள்ளன.

பொருள்களுக்காக மக்கள் அலையத் தேவையில்லை செயலகத் தகட்டுப்பாடு ஏற்படுத்துவதற்கு உதவ வேண்டாம். மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை பெறுவதற்கு செயலகம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

காங்கேசன்துறையில் உள்ள கப்பல்களிலும் போதியளவு பொருள்கள் உள்ளன. கொழும்பில் தரித்துள்ள 'வாதுவ' கப்பலிலும் தனியாருக்கு நாராளமாக பொருள்கள் வருகின்றன.

வதந்திகளை நம்பி கடுதல் விலை கொடுத்து மக்கள் பொருள்களை வாங்கவேண்டாம்—என்று தெரிவித்துள்ளார். (த-3)

ஹெலி தாக்குதல் வல்வையில் ஒருவர் பலி

வல்வெட்டித்துறை, ஒக் 3

நேற்று முன்தினம் மாலை வல்வையில் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாக்குதலில் மாணவன் ஒருவர் உயிரிழந்தார். இரு பேர் காயமடைந்தனர்.

வல்வை பாவாரிகாளைப் பகுதியைச் சேர்ந்த செல்வராசா பவுணன் என்பவரே மரணமானவர் ஆவார்.

மற்றும் இராமசாமி சிவலிங்கம் வயது 87, இளையபெருமாள் யோகலக்ஷ்மி (வயது 35), நடராசா சோதிசிங் (வயது 60), கதிரவேற்பிள்ளை ஜெய்சங்கர் (வயது 17) இரத்தினசிங்கம் மதிவதனி வயது 14, சாம்பசிவம் கிறிகுமார் (வயது 14) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

(இ-155)

அரசே மோசமான பயங்கரவாதி!

ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் குற்றச்சாட்டு

மொழுந்து, ஒக். 3

புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறுபவர்கள் அதைவிட மோசமான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் எம்.பியான சுரேஷ் பிரேமச்சந்திரன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இருக்கக் கூடியது இனப்பிரச்சினை அல்ல, அரசியல் பிரச்சினை அல்ல அது பயங்கரவாதப் பிரச்சினை என ஜனாதிபதி கூறி வருகிறார். உண்மையில் பிரச்சினையின் அடிப்படையை உணராதவரை இவர்களால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

கடந்த 10 ஆண்டுகளாக இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையால் நாடு அடைந்த நட்டங்கள், நாடு கண்ட துன்பங்கள் யாவற்றையும் இவர்கள் மறந்துபோனது கவலைக்குரியது.

நடந்துமுடிந்த யுத்தங்களில் இருந்து இவர்கள் பாடங்களைப் படிக்காமல் இருப்பதால்— தொடர்ந்து இந்த யுத்தத்தை நடைமுறைப் படுத்துவதால்—நிச்சயமாக மேலும் மேலும் இழப்புகளை உருவாக்குமே தவிர அதனால் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

மொத்தத்தில் இந்தப் பிரச்சினையை வேறு பக்கம் திசை திருப்பி, சிங்கள மக்கள் மத்தியில் எமது இராணுவத்தினர் புலிகளை வெற்றி கொண்டு விட்டார்கள் என்ற ஒரு காயையை உருவாக்க முடியுமே தவிர பிரச்சினையைத் தீர்க்க உதவப்போவதில்லை

இராணுவத் தீர்வு ஒன்று சாத்தியமல்ல. அரசியல்தீர்வு ஒன்றினூடாக மாத்திரமே இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்துள்ளோம்.

நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை பலிகொடுப்பதன் மூலமோ, நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைப் பலிகொடுப்பதன் மூலமோ, அல்லது நூற்றுக்கணக்கான புலிகள் சாவதன் மூலமோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

குடாநாட்டில் உள்ள பல கோவில்கள் மீதும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் வரவாக மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பாதிக்கப்படுவது எல்லா மக்களுமே என்பதை அதனைச் செய்பவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5)

யுத்தம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்து இராணுவத் தீர்வு காண்பதாயின் [யுத்தத்தின் மூலம் தீர்வு தேடினால் 2000 ஆவது ஆண்டுக்கு முன்னர் இன்னும் ஏழு ஆண்டுகளில்— நாடு இரு கூறுகளாகப் பிரிந்து விடும்.

இதனை உணராமல் அரசியல் வாதிகளும், இராணுவ அதிகாரிகளும் இருக்கப்போவது கவலைக்குரியதாகும் — என்று தெரிவித்தார்.

தென்பகுதியில் உள்ள மக்களுக்கு வடபகுதியில் இனப் பிரச்சினை இல்லை எனக் கூறிக்கொண்டு அரசு யுத்த மயமான தீர்வை நோக்கிச் செல்வதன் மூலம் நாட்டை இரண்டாகப் பிரிப்பதனை தவிர்க்க இயலாது.

இனப்பிரச்சினை தீர்க்கப் படாவிடில் 2 ஆயிரமாம் ஆண்டுக்கு முன்னர் நாங்கள் ஈழத்தைக் கொடுக்க வேண்டி வரும். அல்லது அவர்கள் ஈழத்தை கைப்பற்றிக் கொள்வார்கள்; யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு தென்னிலங்கை மக்கள் — குறிப்பாக அரசியல்வாதிகள் செயற்படாமல் விடுவார்களாயின் 'தேசிய இலக்கை' என்ற பெரும்பான்மையினரின் அபிலாஷை கனவாகப் போய் விடும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-6-5)

மிருசுவிலில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 32) என்பவரே மரணமானவராவார். இவரது மகனான தவராசா யாழினி (வயது 4) காயமடைந்துள்ளார்.

இதேவேளை இம் முகாமிலிருந்து நடந்துவந்த பொதுமக்கள் மீது ஹெலிகொப்டர் 50 எலிபர் தாக்குதல் நடத்தியதில் பெண்ணொருவர் ஆபத்தான நிலையிலாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இவருடன் வந்த கே. லோகேஸ்வரன் (வயது 26) என்பவர் காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-117)

வர்த்தக திணைக்கள கடைகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 03

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைக் கருதில் கொண்டு குடாநாட்டில் உள்ள வர்த்தக திணைக்களத்தின் அனைத்துக் கிளைகளும் நேற்றுத் திறந்திருந்தன. இன்று ஞாயிற்றுக்கிழமையும் அவை முழுநேரமாக திறந்து விற்பனை மேற்கொள்ளப்படும்.

இதற்கான உத்தரவு செயலக புனர்வாழ்வுப் பகுதியால் வர்த்தக திணைக்களத்தின் அனைத்து கிளை முகாமையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத் திணைக்களத்தின் கிளைகளில் அத்தியாவசியப் பொருள்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் இன்றி அவை பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-168)

மட்டக்களப்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜன் (சிவசந்திரன் போகநாதன் — வேம்பையடிவீதி, ஆரம்பநகர்) ஆகிய மூவர் வீரச்சாவடைந்தனர்.

இதே வளை —

நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்துச் சம்பவம் ஒன்றில் வீரவேங்கை வீமன் (தாமோதரம் பிள்ளை விமலன் — சித்தன் கேணி, என்ற பேராவி வீரச்சாவடைந்தார். (இ-5)

துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சிறுவனின் சடலம்

யாழ்ப்பாணம், ஒக். 3

விடத்தல் பளைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த சுமார் 13 வயது மதிக்கத்தக்க—சிறுவன் ஒருவனின் சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தச் சிறுவன் நீல நிற காற்சட்டையும், மேற்சட்டையும் அணிந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

ஓய்வூதிய வவுச்சர்

நவாலி, ஒக். 3

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் செப்டம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலகத்தினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (த-100)

ROTARACT CLUB

எஸ். எம். பெர்னாண்டோ
நிறுவனத்தின் ஆதரவில்

யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகம்
நடத்தும்

"மிட்ரவுண்" கிண்ணத்திற்கான

ஆறுபேர் கொண்ட அணிகளுக்கிடையில்
ஐந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்

தோற்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

கால் இறுதி, அரையிறுதி, இறுதி ஆட்டங்கள்

காலம்:- 03 — 10 — 1993 (இன்று)
இடம்:- யாழ். இந்துக் கல்லூரி, மைதானம்.

பிரதம விருந்தினர்:- RTN V. T. சிவலிங்கம்
சிறப்பு விருந்தினர்:- S M. பெர்னாண்டோ (கண்ணாடி வழங்குநர்)
திரு. முருகநேசன் (விளையாட்டு அபிவிருத்திக் குழு)

அனைவரையும் திரண்டு வருமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

செயற்திட்ட இயக்குநர்
யாழ் மிட்ரவுண் றோட்டறக் கழகம்

(கி/5995)

இப்பத்திரிகை நிறு உதயன் பப்லிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 101/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03-10-1993 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

நீரைச் சேமிப்போம்
ஊரைச் செழிக்கவைப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org